தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. கணைக்கால் இரும்பொறை ஆண்ட நாடு

அ ) சோழநாடு ☐ ஆ ) சேரநாடு ☐

இ ) பாண்டியநாடு ☐ ஈ ) பல்லவநாடு ☐

2. சார்பெழுத்துகளின் எண்ணிக்கை

அ ) 217 ☐ ஆ ) 247 ☐

இ ) 100 ☐ ஈ ) 30 ☐

3. ஆசியசோதி என்ற நூலை எழுதியவர்

அ ) கம்பர் ☐ ஆ ) பாரதியார் ☐

இ ) கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை ☐ ஈ ) ஔவையார் ☐

4. முன்னிலையைக் குறிக்கும் சொல்

அ ) நாம் ☐ ஆ ) அவர்கள் ☐

இ ) நீங்கள் ☐ ஈ ) நாங்கள் ☐

5. அங்கவை, சங்கவையின் தந்தையார்

அ ) கபிலர் ☐ ஆ ) பாரி ☐

இ ) ஓரி ☐ ஈ ) காரி ☐

6. தண்மை + நீர்

அ ) தண்ணீர் ☐ ஆ ) தன்னீர் ☐

இ ) தண்நீர் ☐ ஈ ) தன்நீர் ☐

7. கல்யாணி என்ற இடத்தின் இன்றைய பெயர்

அ ) கண்டி ☐ ஆ ) அநுராதபுரம் ☐

இ ) கொழும்பு ☐ ஈ ) நுவரெலியா ☐

8. எதிர்கால வினைச்சொல்லுக்கு எடுத்துக்காட்டு

அ ) பறந்தன ☐ ஆ ) பறக்கும் ☐

இ ) பறந்தது ☐ ஈ ) பறக்கின்றன ☐

9. சங்கிலியனைச் சிறைப்பிடித்தவர்கள்

அ ) போர்த்துக்கேயர் ☐ ஆ ) ஆங்கிலேயர் ☐

இ ) ஒல்லாந்தர் ☐ ஈ ) சீனர் ☐

10. வரட்சி என்பதன் எதிர்ச்சொல்

அ ) கோடை ☐ ஆ ) சூடு ☐

இ ) செழிப்பு ☐ ஈ ) வெம்மை ☐

11. மகாவம்சம் போற்றிப் புகழ்ந்து கூறும் தமிழ் மன்னன்

அ ) சங்கிலியன் ☐ ஆ ) எல்லாளன் ☐

இ ) பண்டாரவன்னியன் ☐ ஈ ) கயிலைவன்னியன் ☐

12. இறந்தகால இடைநிலைகள்

அ ) கின்று,கிறு ☐ ஆ ) ப்,வ் ☐

இ ) ட்,த்,ற்,ன்,இன் ☐ ஈ ) இன்,கிறு,ப் ☐

13. " மெய் வருத்தம் பாரார் ..." என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ ) ஆத்திசூடி ☐ ஆ ) கொன்றைவேந்தன் ☐

இ ) மூதுரை ☐ ஈ ) நீதிநெறிவிளக்கம் ☐

14. ஆடுதல் என்பது

அ ) தொழிற்பெயர் ☐ ஆ ) காலப்பெயர் ☐

இ ) இடப்பெயர் ☐ ஈ ) பொருட்பெயர் ☐

15. சேந்தன் நீரை __________ எனக் குடித்தான்.

அ ) படபட ☐ ஆ ) மடமட ☐

இ ) மளமள ☐ ஈ ) சலசல ☐

16. கீரிமலையில் அமைந்துள்ள ஈச்சுரம்

அ ) திருக்கோணேச்சுரம் ☐ ஆ ) முன்னேச்சுரம் ☐

இ ) தம்பலேச்சுரம் ☐ ஈ ) திருக்கேதீச்சுரம் ☐

17. பௌத்தநெறியை மீட்பதற்கான போர் என்ற முழக்கத்தை முன் வைத்து எல்லாளனுடன் போரிட்டவன்

அ ) அசேலன் ☐ ஆ ) காகவனத்தீசன் ☐

இ ) குத்திகன் ☐ ஈ ) துட்டகெமுனு ☐

18. பொழிலன் விளையாட்டுத்திடலுக்குச் சென்று விளையாடினான். இது

அ ) தொடர்ச்சொல்லியம் ☐ ஆ ) தனிச்சொல்லியம் ☐

இ ) வினாச்சொல்லியம் ☐ ஈ ) கலப்புச்சொல்லியம் ☐

19. "வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்த
முள்ளத் தனைய துயர்வு" என்ற குறள் இடம்பெற்ற அதிகாரம்

அ ) அன்புடைமை ☐ ஆ ) ஒழுக்கமுடைமை ☐
இ ) வெகுளாமை ☐ ஈ ) ஊக்கமுடைமை ☐

20. செழியன் பழத்தை வெட்டினான். இதில் பழத்தை என்ற சொல்

அ ) எழுவாய் ☐ ஆ ) செயப்படுபொருள் ☐
இ ) பயனிலை ☐ ஈ ) வினைச்சொல் ☐

21. திருவள்ளுவரால் விடாமுயற்சிக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்ட விலங்கு

அ ) புலி ☐ ஆ ) சிங்கம் ☐
இ ) எலி ☐ ஈ ) யானை ☐

22. யாழ்நூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு

அ ) 1972 ☐ ஆ ) 1983 ☐
இ ) 1981 ☐ ஈ ) 1980 ☐

23. புல்வெளிகள் ______________ எனக் காணப்பட்டன.

அ ) பச்சைப்பசேல் ☐ ஆ ) கணீர்கணீர் ☐
இ ) அல்லும்பகலும் ☐ ஈ ) இன்பதுன்பம் ☐

24. குமணமன்னனைக் காணக் காட்டுக்குச் சென்றவர்

அ ) பெருஞ்சித்திரனார் ☐ ஆ ) சீத்தலைச்சாத்தனார் ☐
இ ) பெருந்தலைச்சாத்தனார் ☐ ஈ ) இளங்குமணன் ☐

25. ________________ கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

அ ) அவர்கள் ☐ ஆ ) அவன் ☐

இ ) அவள் ☐ ஈ ) அவை ☐

26. ________________ நாளை சர்வதேச நெல்சன் மண்டேலா நாளாக ஐ.நா அறிவித்தது.

அ ) மே 18ஆம் ☐ ஆ ) மே 17ஆம் ☐

இ ) யூலை 18ஆம் ☐ ஈ ) யூன் 18ஆம் ☐

27. அ,இ,உ,எ,ஒ என்பன ________________ எழுத்துகள்.

அ ) மெல்லின மெய் ☐ ஆ ) உயிர்க்குறில் ☐

இ ) இடையின மெய் ☐ ஈ ) உயிர் நெடில் ☐

28. கூவுகின்றது என்பது

அ ) பலர்பால் ☐ ஆ ) பலவின்பால் ☐

இ ) ஒன்றன்பால் ☐ ஈ ) ஆண்பால் ☐

29. எல்லாளன் கட்டுவித்த குளங்களில் ஒன்று

அ ) வவுனிக்குளம் ☐ ஆ ) சேந்தாங்குளம் ☐

இ ) கனகராயன்குளம் ☐ ஈ ) வேப்பங்குளம் ☐

30. நீங்கள் + ஐ

அ ) நீங்களை ☐ ஆ ) உங்களை ☐

இ ) எங்களை ☐ ஈ ) உன்னை ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

மாந்தர் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் பல உள்ளன. நற்பண்புள்ள குடிமக்களை உருவாக்குவது குடும்பம். தாயின் தாலாட்டு குழந்தைக்கு அன்பையும் அரவணைப்பையும் தருகிறது. எம்மைப் பெற்றுப் பேணி வளர்க்கும் எமது தாய் தந்தையர் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளைச் சிறு அகவை முதல் எங்களுக்குச் சொல்லி வளர்ப்பவர்கள் பெற்றோர்கள். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுதல், அயலவருடன் நல்லுறவைப் பேணுதல், பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், உண்மை பேசுதல் போன்றவற்றை எமக்கு ஊட்டி வளர்க்கின்றனர்.

1. நற்பண்புள்ள குடிமக்களை உருவாக்குவது எது?

___________________________________________

2. நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் இரண்டு தருக.

___________________________________________

___________________________________________

3. நாங்கள் யார் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும்?

___________________________________________

___________________________________________

4. நாம் யாருடன் நல்லுறவைப் பேண வேண்டும்?

___________________________________________

5. குழந்தைக்கு அன்பையும் அரவணைப்பையும் தருவது எது?

___________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வன்னியை ஆண்ட மன்னன் யார்?

_______________________________________________

2. தேசிகவிநாயகம்பிள்ளைக்கு கவிமணி என்ற பட்டத்தை வழங்கியவர் யார்?

_______________________________________________

3. இலங்கையில் இயற்கைத்துறைமுகம் எங்கே அமைந்துள்ளது?

_______________________________________________

4. தாலாட்டுப்பாடல் யாரால், யாருக்குப் பாடப்படும்?

_______________________________________________

5. காகிதம் எதிலிருந்து செய்யப்படுகிறது?

_______________________________________________

6. யாழ்ப்பாணத் தமிழரசின் கொடி எது?

_______________________________________________

7. சுட்டாலும் வெண்மை தருவது எது?

_______________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.**

# கதிரவன்

| | | | | |
|---|---|---|---|---|
| செழிக்க | பயிர்கள் | இருளை | கதிரவன் | உதவிடுவான் |

காலையில் ____________________ காலிப்பான்

கவின் மிகு காட்சி தந்திடுவான்

உலக ____________________ விலக்கிடுவான்

பயிர்கள் வாழ ____________________

மழையும் வெயிலும் அளித்திடுவான்

மரங்களைச் ____________________ வைத்திடுவான்

____________________ யாவும் விளைய வைப்பான்

மக்கள் மகிழ்ந்துவாழ வழி செய்வான்

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

நான் கோடை விடுமுறையில் ஒருநாள் மாமாவுடன் கடற்கரைக்குச் சென்றேன். அங்கே எனது நண்பனைக் கண்டேன். எனது நண்பனுடன் கடலில் நீந்தி மகிழ்ந்தேன். பின்னர் நாங்கள் பட்டம் விட்டு விளையாடினோம். அப்பொழுது நேரமாகி விட்டதால் மாமா என்னை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினார்.

1. தன்மைச் சொல் ஒன்று தருக.

   ______________________________________________

2. பொருட்பெயர் ஒன்று எழுதுக.

   ______________________________________________

3. வினைச்சொல் ஒன்று தருக.

   ______________________________________________

4. உயர்திணைச் சொற்கள் இரண்டு எழுதுக.

   ______________________________________________

5. பலர்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

   ______________________________________________

6. காலப்பெயர் ஒன்று எழுதுக.

   ______________________________________________

புள்ளிகள் 12

**ஆ) பொருத்தமாக நிரற்கூட்டில் எழுதுக.**

1. தமிழர் ஆடிப்பிறப்பைக் கொண்டாடுவர்.
2. ஆசிரியர் மாணவனை அழைத்தார்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| | | |
| | | |

புள்ளிகள் 03

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மனம் | மணம் | வெண்ணிற | வென்னிற | மலை | மழை |

அது ஓர் உயரமான ________________ . அதில் ஏறும் போது ________________ தூறத் தொடங்கியது. பாதை ஓரங்களில்________________மலர்கள் மலர்ந்திருந்தன. அந்த மலர்களைப் பார்த்து என் ________________ மகிழ்ந்தது. அப் பூக்களின் ________________ எனக்கு மகிழ்வைத் தந்தது.

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

கடல் மிகப் பெரியது. அது நீல நிறமானது. நாம் கடல்நீரைக் குடிக்க முடியாது. கடலில் பெரிய கப்பல்களும் சிறிய கப்பல்களும் செல்லும். பல வகையான மீன்கள் கடலில் வாழ்கின்றன. மீனவர் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பர்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.**

- ✱ தகுதி அறிந்து அவையில் தோன்று.
- ✱ சிறிது எனினும் சிறப்பு உண்டு.
- ✱ கல்வியின் சிறப்பு.
- ✱ முயற்சி உயர்வைத் தரும்.
- ✱ துன்பத்தில் உதவுதல்.

1. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

_______________________________________________

2. தோள்கொடுப்பான் தோழன்.

_______________________________________________

3. தன்பலம் கொண்டு அம்பலம் ஏற வேண்டும்.

_______________________________________________

4. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.

_______________________________________________

5. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

_______________________________________________

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

* கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
* தமிழீழ நாடும் விடுதலைப் போராட்டமும்
* எனது குடும்பம்
* தொலைக்காட்சி

புள்ளிகள் 15